2014 – இதழ் 7

இலவசம்

உள்ளான மனிதன்

E-COPY

பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும்

இச்சையடக்குவார்கள். 1 கொரி. 9:25

THE INNER MAN

MONTHLY FREE ISSUE – 2014 ISSUE 7

PRODUCED & PRESENTED BY GTAC - FIND E-COPY AT THE GTAC WEBSITE

E-COPY

உள்ளான மனிதன்

உள்ளே.....

உன் இருதயத்தை எனக்குத் தா.....02

பந்தயப்பொருள்.....05

பிரசங்கக் குறிப்பு 08

ஜெபம்.....10

அதினதின் காலத்தில் 12

உன் நம்பிக்கை 14

THE INNER MAN

e-mail: innerman.info@yahoo.com

☎ 416.613.2909

“உன் இருதயத்தை எனக்குத் தா”

~ போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

மனிதர்கள் மற்றவரின் இருதயத்தை வென்றிட விரும்புவார்கள். அதை வென்ற பின்பு பின் விளைவுகளின் தாக்கத்தை உணராது மற்றவரின் இருதயத்தோடு விளையாடுவார்கள். இதனால் பலரின் வாழ்க்கை சீரழிந்து போய்யுள்ளது.

இது 17 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு சம்பவம். நான் வேலை செய்த அலுவலகத்தில் சில மாதங்களாய் எல்லோரும் ஊக்கமாய் வேலை செய்து, ஒரு வேலைத் திட்டத்தை வெற்றிகரமாய் முடித்தோம். அதை கொண்டாடும் முகமாக அலுவலகத்தை அலங்கரித்தார்கள். ஓவ்வொருவருடைய மேசையும் அலங்கரிக்கப் பட்டது. அதில் வாயு நிரப்பிய பலூன்களை இணைத்திருந்தார்கள். இடம் அழகாயிருந்தது. நாட்கள் செல்லச் செல்ல பலூன்கள் சுருங்கிப் போக ஆரம்பித்தன. அவை இப்போது அலங்காரம் இழந்து காணப்பட்டன. அதனால் அந்த பலூன்களை குப்பையிலே போட்டார்கள். ஆனால் ஒருவர் மாத்திரம் தனது மேசையிலே அதைத் தொடர்ந்து வைத்திருந்தார். நாளுக்கு நாள் அந்த பலூன் மென்மேலும் சுருங்கிக்கொண்டே சென்றது. ஆனால் அவரோ தனது மேசையை விட்டு அதை அகற்றவில்லை. சில மாதங்களுக்கு பின்பு, ஓர் நாள் நான் அந்த பலூனை என் கையிலேடுத்தபடி அவரிடம் ஏன் இதை இன்னமும் உமது மேசையில் வைத்திருக்கின்றீர் என்று கேட்டேன். அவரோ மிகவும் பதைத்தபடி, அது தனது இருதயத்தை பிரதி பலிப்பதாயும், அதை எறிந்துவிட வேண்டாம், அது தனக்கு வேண்டுமென்றும் சொன்னார். அவரிடம் ஏன் உம் இருதயம் அப்படியா யிற்று? யாரிடத்தில் அதை கொடுத்தீர் என்று கேட்டேன்.

“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.” என்று நீதிமொழி 4:23 இல் கூறப்பட்டுள்ளது. இருதயத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமம் பல உண்மைகளை எடுத்துக் கூறியுள்ளது. அதில் எல்லாவற்றை ப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயி ருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? (ஏரேமியா 17:9) என்று எழுதப்பட்டுள்ளது. இயேசுக்கிறிஸ்துவும் “வாயிலிருந்து புறப்படுகிற வைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும், அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித் தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.” (மத்தேயு

15:18-20) என்று கூறியுள்ளார். தேவன் "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவரு மாயிருக்கிறேன்." (ஏரேமியா 17:10) என்று கூறியுள்ளார். சில மனிதர்கள் எப்பவுமே பொல்லாதவைகளையே சிந்திக்கின்றார்கள். அதை அவர்களும் அறிந்திருக்கின்றார்கள், ஆயினும் விடுதலை யில்லாது வாழ்கின்றார்கள். இதனால் மனிதர்களிடையே நம்பகத்தன்மை அற்றுப்போகின்றது. பொல்லாத சிந்தனை, குடும்ப வாழ்விலும் நம்பிக்கையின்மை, சந்தேகம், அன்பின்மை போன்றவற்றை கணவன் மனைவிக்கிடையே தோற்றுவிக்கின்றது. பெற்றோர் பிள்ளைகள் இடத்திலும் இவை காணப்படுகின்றன. இவற்றின் விளைவுகள் மிகவும் வேதனையையும் அழிவுகளையும் உண்டுபண்ணுகின்றன.

மனிதர்கள் தங்கள் வாழ்கையில் வேஷம் போடுவதுண்டு. அவர்கள் பிறர் முன்பாக நடிப்பதுமுண்டு. ஆனால் "தேவனுடைய வார்த்தை யானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிற தாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமும் வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்." (எபிரேயர் 4:12-13) தேவனுக்கு மறைவானவை ஒன்றுமில்லை. அவர் எல்லாவற்றையும் அறிகிறவராயுமுள்ளார்.

இருதயமானது வாழ்க்கைப் பாரத்தினால் அமிழ்ந்து வேதனைப் படுவதுமுண்டு. தேவனோ "இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறார்" அவர் இரங்குகின்றவரும் ஆறுதல் அளிக்கின்றவருமாக உள்ளார். அவர் காயங்கட்டுகின்றவரும் குணப் படுத்துகின்றவருமானவர். அவர் "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத்தா: உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக." என்று ஒவ்வொருவரையும் அழைக்கின்றார். "என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும். உன் உதடுகள் செம்மையானவைகளைப் பேசினால், என் உள்ளிந்திரியங்கள் மகிழும். உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமை கொள்ள விடாதே: நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. நிச்சயமாகவே முடிவு உண்டு: உன் நம்பிக்கை வீண்போகாது. என் மகனே, நீ செவிகொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து. மதுபானப்பிரியனையும் மாம்சப்பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்: தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும். உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு: உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே. சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே, அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்: ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால்

மகிழ்வான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்: உன்னைப்பெற்றவள் மகிழ்வாள். என் மகனே, உன் இருதயத்தை எனக்குத்தா: உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக." என்று தேவன் சொல்லுகின்றார். இன்று இருதயம் குணமடைய வேண்டுமானால், உன் இருதயத்தை அவரிடம் கொடுத்து, இயேசுவே எனக்கு இரங்கும் என்று கேட்பாயாக.

கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

GRACE TABERNACLE APOSTOLIC CHURCH

குடும்பப் பிரச்சனைகள், உளவழுத்தம், தீராத நோய், மதுபானம் மற்றும் சொல்லமுடியாத அடிமைத்தன பழக்கங்கள் உங்களையோ அல்லது உங்கள் உறவினர் நண்பர்களையோ நாளாந்தம் வாட்டுகின்றதா? சமாதானம் இழந்த நிலையில் வாழ்கின்றீர்களா? உங்கள் வீட்டிலோ, மருத்துவமனையிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ நாங்கள் உங்களுக்காக தனிப்பட இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கவிரும்பினால், இப்புத்தகத்தில் குறிப்பிட்ட தொலைபேசி இலகத்தில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

☎ 416.613.2909

பந்தையப் பொருள்



வில்மா ரூடோப் (Wilma Rudolph) தனது ஐந்து வயதில் போலியோ (Polio) வியாதியினால் பாதிக்கப்பட்டார். அந்தச் சிறுமியின் இடது கால் செயலிழந்து போயிற்று. வில்மா ஒருபோதும் இனி நடக்க மாட்டாள் என கூறினார்கள். அதை வில்மா விசுவாசிக்க மறுத்தாள். நடப்பது மட்டுமல்ல நான் ஒடுவேன் என்று உறுதி கொண்டாள். ஆம் அவள் ஓட ஆரம்பித்தாள், அவளுடைய ஓட்டம் ஒலிப்பிக் போட்டி வரைக்கும் சென்றது. ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்க பதக்கங்களை பெற்ற முதலாவது அமெரிக்க பெண் வீராங்கனையாக வில்மா சாதனை செய்தாள். இந்த உண்மைச் சம்பவத்தை நீங்கள் அவளுடைய வாழ்கை வரலாறு புத்தகத்தில் வாசிக்கலாம்.

ஒலிப்பிக் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற விளையாட்டு வீரர்கள் பல வருடங்களாக தங்களை ஒடுக்கி, பலவற்றை ஒறுத்து எப்படியாவது தங்கப்பதக்கத்தை தட்டி கொள்ளவேண்டும் என்று அயராது உழைக்கின்றார்கள்.

எப்படியாக தங்களை பயிற்றுவித்துக் கொள்ளகின்றார்கள்? மேலோட்டமாக ஆராய்ந்து பார்த்தால்:

- பயிற்ச்சி நிரலை ஆயத்தம் செய்தல்
- மனதையும் உடலையும் தயார் செய்தல்
- ஆரோக்கியமான உணவு உண்ணுதல்
- போதிய அளவு நித்திரை செய்தல்
- தொடர்சியான முறையான உடற்பயிற்ச்சி செய்தல்
- நன்றாக சுவாசம் செய்தல்
- உளவழுத்தத்தை குறைக்க தியானம் செய்தல்
- அத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களிடம் உதவி பெறுதல்
- அநேக போட்டிகளில் கலந்து கொள்ளல்

இப்படியாக தங்களை முறையான பயிற்ச்சியில் ஒழுக்கப்படுத்தி, தங்கள் ஆசைகளை கட்டுப்படுத்தி, தங்கள் நோக்கத்தை தடைசெய்யும் எல்லாவித வெளித் தொடர்புகளையும், உறவு மற்றும் நட்புக்களையும் துண்டித்து, தங்கள் முழு பெலத்தோடும் விளையாட்டு வீரர்கள் உழைக்கின்றார்கள்.

இவ்வுலகத்தோடு அழிந்து போகும் புகழுக்காக மனிதர்கள் கடுமையாக உழைக்கின்றார்கள். அழியாத நித்திய தேவ ராஜ்யத்தை குறித்து

இன்னும் மேன்மையாக செயல்படவேண்டும். இந்த வாழ்கையுடன் எங்கள் சரீரம் அழிந்து போய்விடும். அழியாத ஆத்மா எங்கு சென்றடையும் என்ற நிச்சயம் இருக்க வேண்டும்.

பந்தயச் சாலையில் (running race) ஓடுருகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத்தை (Prize) பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். (1 கொரி 9:24)

பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்க மாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லா கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் என்று அப்போஸ்தலாகிய பவுல் கூறுகின்றார்.

விளையாட்டுத் துறையில் முதலிடம் வகிக்க ஆழமாக திட்டம் போட்டு, மனநிலையையும். சரீரத்தையும் எல்லாவிதத்திலும் ஆயத்தப்படுத்தி, தொடர்சியாக பயிற்ச்சி செய்து, நோக்கத்திற்கு தடையான உறவுகளை துண்டித்து தயாராகின்றார்கள். எங்களுடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, இந்த தற்காலிகமான வாழ்க்கை கடந்து போய்விடும். நித்திய வாழ்வை நோக்கி இச்சையடக்கத்தோடு ஓடவேண்டும். வெற்றி பெறும் படியாக ஓடவேண்டும்.

விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்: அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்: என்று அப்போஸ்தல னாகிய பவுல் தீமோத்தேயுவிற்கு அறிவுரை கூறுகின்றார். நிலையற்ற உலக காரியங்களில் நம்பிக்கை வைக்காமல் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கின்ற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்து ஓடவேண்டும்.

“நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட் டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிற தில்லை: ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னான வைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர்கிறேன்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறிய பிரகாரமாய், மேலான காரியத்தை வாஞ்சித்து, பொறுமையோடே தேவ வழிநட த்தலின் படி அவருடைய பாதையிலே செல்லுவோம்.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துதாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

ஞாயிறு சிறுவர் ஓய்வு நாள் படசாலை
Sunday School ..... 9:00 AM
(மாதத்தின் முதல் ஞாயிறு சிறுவர் பாடல் பயிற்ச்சி
First Sunday of the month – Children Choir Practice)

ஞாயிறு காலை ஆராதனை
Sunday Morning Service.....10:00 AM

துதியும் ஜெபமும் செவ்வாய் கிழமை மாலை
Worship and Prayers Every Tuesday..... 7:30 PM

உபவாச ஜெபமும், வேதப்படிப்பும்
மாதந்தோறும் இரண்டாம் சனிக் கிழமை காலை
Fasting & Prayers
2nd Saturday of the month..... 10:00 AM

பெண்கள் ஜெபம்
ஒவ்வொரு வியாழக்கிழமையும் (வீட்டுக்கூட்டம்)
Prayers – by Ladies (House Meeting)
Every Thursdays start at .....8:30 AM

ஜெபம் – தெய்வீக சுகமும் விடுதலையும்
2ம், 3ம், 4ம் வெள்ளி கிழமைகளில் மாலை (வீட்டுக் கூட்டம்)
Prayers – Divine Healing and Deliverance (House Meeting)
2nd, 3rd, 4th Fridays.....7:30 PM

RENTED FACILITY – WE USE ONLY ON SUNDAYS, TUESDAYS, 2nd SATURDAY

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, Ontario
(On Midland Avenue, One Block North of Finch)
210– 807 சில்வர் ஸ்டார் புலவட்
[மிட்லாண்ட் அவென்யுவில் பின்ச் வீதிக்கு சற்று வடக்கே]

www.gtaCHURCHnet.ca ☎ 416.613.2909

பிரசங்கக் குறிப்புகள்

“கர்தருடைய நாள்”

[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]

உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் (லூக்கா 21:34). இந்த வசனத்திலே கர்த்தருடைய நாளைக் குறித்து சொல்லப்பட்டிருக்கின்றது, தேவனுடைய நாள் எல்லார் மீதும் வரும். விழிப்பாய் இருக்கும் மனிதர்களுக்கு அது சந்தோஷமான நாள். திருமணநாளை நோக்கி ஒரு பெண் எப்படி ஆவலாகவும் ஆயத்தமாகவும் இருப்பாளோ அப்படியாக அதற்காக ஆவலாக விழித்திருப்பவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான நாளாக இருக்கும். அதைக்குறித்து அக்கறை அற்றிருப்பவர்களுக்கு கண்ணியாக இருக்கும். கண்ணி இருக்கும் இடத்தில் மனிதர்கள் அகப்படும் போது அதில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாதிருக்கும். கர்த்தருடைய நாள் எதிர்பாராத நேரத்தில் வரும்.

மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கும் என்று இயேசு நிக்கதெமேயுக்கு சொன்னார். இதனை நாங்கள் யோவான் 3:1-21ல் வாசிக்கலாம்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட மனிதன் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வரும் போது அவர்கள் தேவ காரியங்களை செய்தார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்து இயேசுவுக்கூடாக அவரை ஏற்றுக்கொள்ளுகிற யாவருக்கும் கர்த்தர் ஆவியானவரை அருளுகின்றார். நாங்களும் இந்த ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறோம்.

ஆவிக்குரிய வாழ்கை வாழ்பவன் எப்படி இருக்கவேண்டும்? சவுல் என்னும் ராஜா அமலேக்கியருடன் யுத்தத்திற்கு செல்லும் போது, எதிரிகளின் சகல காரியங்களையும் நிர்மூலமாக்கும் படியாக தேவன் தீர்க்கதரிசியூடாக உரைத்தார். ஆனாலும் சவுல் ராஜா, கொழுமையான ஆடுகளை இச்சித்து அவைகளை கொண்டு வந்தான். யுத்தத்தின் பின், சவுல் ராஜாவோ தீர்க்கதரிசியை சந்தித்தபோது, நீர் சொன்னபடியே செய்தேன் என்றான், அதற்கு தீர்க்கதரிசி, அப்படியானால் என்னுடைய

காதிகளில் விழும் ஆடுகளின் சத்தம் என்ன என்று கேட்டான். ஆவிக்குரிய வாழ்கை இப்படி இருக்க முடியாது.

நாங்கள் எந்த நிலையில் இருந்தால் என்ன - ஐசுவரியவானாக இருந்தால் என்ன, ஏழையாக இருந்தால் என்ன, கல்வி கற்றவர்களாக இருந்தால் என்ன, கல்லாதவர்களாக இருந்தால் என்ன, யாவரும் ஒரு நாள் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும்.

இன்று நான் ஆவிக்குரியவனாக இருந்தால் மாம்சத்திற்குரிய (இவ் உலக) காரியங்களுக்கு அடிமைப்பட முடியாது. உன் சதோதரனை அன்பு செய் என்று இயேசு சொன்னார். எல்லா நிரூபங்களிலும் இக்காரியத்தைக் குறித்து எழுதியிருக்கிறார்கள். யாக்கோபு சகோதரனை அன்பு செய்வது ராஜரீகமான கட்டளை என்று கூறினார்.

தீட்டானதையும், தேவன் புறக்ககணித்ததையும் தேவனுக்கு பலியிடும்படியாக கொண்டு வந்தேன் என்று சவுல் ராஜா சொன்னார். ஆனால் உண்மையிலே அவர் அவைகளில் இச்சை கொண்டிருந்தார். பலியைப் பார்க்கிலும் இரக்கத்தையும், (ஆட்டின் நிணத்தைப் பார்க்கிலும்) கீழ்படிதலையும் கர்த்தர் விரும்புகின்றார். ஆனால் அந்த கீழ்படிவு சவுல் ராஜாவின் வாழ்க்கையில் இருக்கவில்லை. நாங்கள் அப்படி இருக்கலாகாது.

பிரதிஷ்டையுடன் நாங்கள் வாழவேண்டும். சுகபோக வாழ்கை வாழ வேண்டும் என்னும் ஆசையுடன் லௌகிக (உலக) கவலைகளில் இழுபட்டு வாழ்க்கை நடத்தினால் பரலோகம் செல்ல முடியாது. தேவனுடைய பிள்ளையாக வாழ்பவர்கள் பரலோகத்திற்கு செல்வார்கள். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். ஆவியால் பிறந்தது ஆவியாக இருக்கும் மாம்சத்தில் பிறந்தது மாம்சமாயிருக்கும். இரண்டும் ஒரு இடத்தில் இருக்க முடியாது. நாங்கள் தேவனுடைய பிள்ளையாக வாழ வேண்டும்.

[இந்த தேவ செய்தியை முழுமையாக கேட்க விரும்பினால், பின்வரும் இணையத் தளத்தில் (Internet இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்க முடியும்.]

www.gtaCHURCHnet.ca\im\A1.mp3

Pastor Ranjit Constantine
GRACE TABERNACLE APOSTOLIC CHURCH
கிருபையின் கூடார அப்போஸ்தல சபை
☎ **416.613.2909** - **www.gtachurchnet.ca**

ஜெபம்!

உங்கள் பிரச்சனைகளை சர்வ வல்லமையுள்ள தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாள னாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்! இன்று நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றேன்!

மற்றவர்களை குறித்திருக்கின்ற கசப்பை என் மனத்தில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்கு செய்த குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்தருளும்! இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். பரிசுத்த ஆவியானவரே இவை யாவற்றிலிருந்தும் விடுதலை பெற எனக்கு உதவி செய்யும்!

தேவனே, இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், இந்த நோயிலிருந்து, என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கி ன்றேன்! கர்த்தாவே உம்மைப்போல் வேறொரு தேவனில்லை! உம்மை உண்மையாக தேடுகிறவர்கள் யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்வது உமக்கு லேசான காரியம்!

நீர் என்னுடைய ஜெபத்திற்கு பதில் தரப்போகிறதற்காக நன்றி! எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!



WORD PUZZLE

T	C	I	R	T	S	C	G	T	R	A	I
N	N	F	D	O	Y	E	O	R	C	C	C
I	T	O	N	N	T	H	E	Y	O	R	O
N	S	R	O	O	N	N	F	R	M	O	L
E	A	E	G	H	E	N	I	S	P	W	L
G	L	V	N	D	W	N	R	E	E	N	A
S	I	E	E	O	T	I	S	O	T	T	S
E	N	R	V	H	Y	R	T	G	E	H	T
M	T	T	I	G	S	R	A	O	S	A	W
A	E	A	F	A	O	M	E	I	T	T	I
G	N	T	L	N	E	T	W	V	N	S	L
S	T	R	A	I	N	I	N	G	E	I	L
G	U	H	W	N	W	O	R	C	A	O	N
W	B	C	E	L	L	I	W	T	A	H	T

EVERYONE	WHO	COMPETES	IN	THE	GAMES
GOES	INTO	STRICT	TRAINING	THEY	DO
IT	TO	GET	A CROWN	THAT	WILL
NOT	LAST	BUT	WE	DO	IT
TO	GET	A CROWN	THAT	WILL	LAST
FOREVER	FIRST	CORINTHIANS	NINE	TWENTY	FIVE

அதீனதின் காலத்தில்!

இலங்கையிலே, காலி வீதியில், ஒரு நாள் காலை வேளையில் ஒரு தாய் தன்னுடைய சின்ன மகனை பாலர் பாடசாலைக்கு செல்லுவதற்காக, பேருந்தில் (Bus) அழைத்து சென்றுகொண்டிருந்தார். அந்த சிறிய பையனோ விடாப்பிடியாக அழுது கொண்டே இருந்தான். "நான் வீட்ட போக வேணும்" என்று திரும்பத் திரும்ப சொன்னபடி தன் தாயாருக்கு ஓயாத தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். பேருந்தில் செல்லும் ஜனங்கள் எல்லாரும் பார்த்து சினமடையும்படி சத்தமாக கதறிக்கொண்டிருந்தான். அந்த தாயாரோ பொறுமையுடன் அவனை அணைத்தபடி அவனைத் தேற்றமுற்பட்டார் ஆனாலும் போகப்போக சத்தம் அதிகமாகவே இருந்தது. பாலர் பாடசாலை அண்மித்ததும் குறித்த இடத்தில் அந்தத் தாயார் மணியை ஒலிக்கப் பண்ணி, மகனை தூக்கிக்கொண்டு இறங்கி விட்டார். அந்த சிறுவனுக்கோ பாடசாலை செல்ல விருப்பமில்லை, ஆனாலும் அந்த தாயார் அவனுடைய விருப்பத்திற்கு எதிராக அவனை பொறுமையுடன் பாடசாலைக்கு அழைத்துச் சென்றார். அந்த சிறுவனின் நிலையில் யார் கொடுக்கும் விளக்கத்தையும் புரிந்து கொள்ளக்கூடிய அறிவும் இல்லை, அந்த நிலையும் இல்லை. தன் தாய் ஏன் அப்படி செய்தார் என்பதை குறித்து அறியும் ஒரு நாள் அந்த மகனுடைய வாழ்கையில் வரும்!

ஒரு செல்வந்தனுக்கு எட்டு வயது நிறைந்த ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் தன் மகனை அதிகமாக நேசித்தான், அவனுடைய சொத்துக்கள் எல்லாமே மகனுடைய சுவீகாரமாக போகும். தன்னுடைய மகனுக்கு பணத்தால் சாதிக்கமுடியாத உலகப் பொருட்கள் ஒன்றும் இல்லை என சொல்ல முடியும். ஒரு நாள் அவனுடைய மகன் தனக்கு ஒரு கார் வேண்டித்தரும் படியாகவும், அதனை தான் சாரதியாக இருந்து ஒட்ட வேண்டும் எனவும் தகப்பனிடம் கேட்டான். நாட்டின் சட்டம் ஒருபக்கம் இருக்க, ஒரு அன்புள்ள தகப்பன் தன்னுடைய மகன் கார் ஓட்டுவதற்கு இன்னும் ஆயத்தம் இல்லை என்று அறிந்து, மகன் பொறுப்பாக பாதுகாப்பாக காரை செலுத்தும் வயது வரும் வரைக்கும் அதனை தன் மகனிற்கு வேண்டிக் கொடுக்கமாட்டான் அல்லவா? மகனுக்கு தன் தகப்பன் தன்னை நேசிப்பது இல்லை என்று தோன்றினாலும், அந்த தகப்பன் தன் மகனிற்கு தீமை விளைவிக்கும் எந்த காரியத்தையும் செய்யமாட்டான் அல்லவா? தன் தகப்பன் ஏன் அப்படிச் செய்தார் என்ற அறிவு அந்த மகனுக்கு வரும் காலம் உண்டல்லவோ!

இப்படியாக பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளின் விருப்பத்திற்கெதி-ராக செய்யும் பல நன்மையான விஷயங்களை உங்கள் கண் முன் கொண்டுவரக் கூடியதாக இருக்கும்.

உண்மையாக தங்கள் பிள்ளைகளை நேசிக்கும் பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகள் ஆயத்தமாகவும் பொறுப்பாகவும் வரும் வரைக்கும் சில காரியங்களை தடுத்து வைப்பது உண்மையல்லவா? இவைகளை விளங்கிக்கொள்வதற்கு பிள்ளைகள் சில நேரம் சிரமப்படலாம் ஆனால் ஏற்ற காலத்தில் கனிந்த மாங்கனி நல்ல சுவை தரும்! பிஞ்சில் பழுத்ததை வெம்பல் என்று சொல்வார்கள்.

இப்படியாக எங்கள் அன்புள்ள பரம பிதாவும் சில காரியங்களை எங்களுக்கு தருவதற்கு காலம் நிறைவேறும்வரை பொறுமையாக காத்திருக்கின்றார். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்கு கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்று இயேசு சொன்னார்.

ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, நட ஒரு காலமுண்டு, நட்டத்தைப்பிடுங்க ஒரு காலமுண்டு; கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு; இடிக்க ஒருகாலமுண்டு கட்ட ஒரு காலமுண்டு; அழ ஒரு காலமுண்டு நகைக்க ஒரு காலமுண்டு; புலம்ப ஒரு காலமுண்டு, நடனம் பண்ண ஒருகாலமுண்டு; கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒருகாலமுண்டு; தழுவ ஒருகாலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு; தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு; காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட காலமுண்டு; கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு; மவுனமாயிருக்க ஒரு கால முண்டு பேச ஒரு காலமுண்டு; சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு; யுத்தம்பண்ண ஒருகாலமுண்டு, சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு என் று பிரசங்கி கூறுகின்றார். அவர் (தேவன்) சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்கின்றார் (பிரங்கி 3:11)

குறித்த காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும் வரை கர்த்தராகிய இயேசுவின் பலத்த கரத்தில் அடங்கி இருங்கள். என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என்று தாவீது ராஜா கூறினது போல, தேவனுடைய காலம் நிறைவேறும் வரை காத்திருங்கள்!

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துதாமே உங்களளை ஆசீர்வதிப்பாராக!

உன் நம்பிக்கை

ஒரு விவசாயி தனக்கிருந்ததெல்லாம் செலவு செய்து ஒரு குத்தகை நிலத்தை எடுத்து பெரும்போகம் செய்தான். பயிர்கள் வளர்ந்து செழித்துதோங்கியது, தன்னுடைய பிரயாசத்திற்கான எல்லா பலனும் இந்தமுறை விளைச்சலில் வந்துவிடும் என திட நம்பிக்கை கொண்டிருந்தான். தீடிரென வந்த புயலில் கல் மழையினால் (hails) முழு விளைச்சலும் பாழாகிவிட்டது.

இந்தியா போன்ற தென் ஆசிய நாடுகளில் பலர் தங்கள் இளம்பிரயாத்திலிருந்து விடாமுயற்சியுடன் கல்வி கற்கின்றார்கள். தங்கள் ஏழ்மையை போக்க கல்வி ஒரு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையுடன் தங்களுக்குண்டான யாவற்றையும் அதில் முதலிடுகின்றார்கள், ஆனால் பலர் உயர்கல்வியை முடித்தும் தாங்கள் பட்ட கடனை அடைக்க ஒரு சாதாரண வேலைகூட கிடைக்காமல் திண்டாடுகின்றார்கள்.

சமுதாய வகுப்புக்கள், தொழில் உயர்வுகள், டாம்பியமான வீடுகள், விலையுயர்ந்த வாகனங்கள், நாகரிகமான ஆடைகள், குடும்ப அந்தஸ்து, மற்றும் அரசியல் செல்வாக்குகள் சிலருக்கு தங்களை சமுதாயத்தில் நல்நிலைப்படுத்துவதற்கு திட நம்பிக்கையை கொடுக்கின்றது. இவை யாவும் தற்காலிக மன நிறைவை மனிதர்களுக்கு கொடுப்பதென்பதில் ஐயமில்லை. எந்த விஷயத்திலும் சிரத்தையான உழைப்பு இன்றியமையாதது. ஆனால் இறைபற்று இல்லாத உழைப்பு சொற்ப பிரயோஜனத்தை மட்டுமே தரும்.

மாமிசத்தின்மேல் (அழிந்து போகின்ற இவ் உலக காரியங்களில்) நம்பிக்கை வைக்க வேண்டுமானால் நானும் வைக்கலாம்: வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாக அப்படிச்செய்யலாம். என்று முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த பவுல் என்னும் அப்போஸ்தலன் கூறினார். அவர் அக்காலத்தின் முறைப்படி நன்றாக கல்வி கற்று, யூதமார்க்க சட்ட முறைமையின்படி எந்த குற்றமும் சாட்டப்படதவரும், வம்ச அடிப்படிடையில் குறைவில்லாதவரும், கிடைப்பதற்கரிதான உரோம சம்ராஜ்யத்தின் குடியுரிமையுடையவராகவும் இருந்தார். இவர் அழிந்து போகின்ற இவ்வுலக காரியங்களில் நம்பிக்கை வைக்காமல் அழியாததும் பரிசுத்தமானதுமான மேன்மையான தேவ ராஜ்யத்தை அடைவதற்கும், கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக உலக காரியங்களை நஷ்டமென்றும் குப்பையென்றும் எண்ணினார்.

இன்று எங்கள் வாழ்விலே எதைக் குறித்து மேன்மை பாராட்டுகின்றோம்? எங்கள் திட நம்பிக்கை எங்கே உள்ளது? அழிந்து போகின்ற உலக காரியங்களிலா?

இன்னும் சிலர் காலங்களை விசேஷித்து நாட்களையும் கணக்குப் பார்த்து, நல்ல நேரம் வரும் நன்மை நடக்கும் என காத்திருக்கின்றார்கள். இவர்கள் நம்பிக்கை நல்ல நாட்களில் மட்டும் தான். அவர்களின் நல்ல நாட்களில் தீமை நடைபெறாமலும் இல்லை, அவர்கள் கெட்ட காலங்களில் அவர்களுக்கு நன்மை நடக்காமலும் இல்லை. எல்லா நாட்களையும் கர்த்தரே சிருஷ்டித்தார். காலம் அவருடைய கரங்களில் உண்டு.

கர்த்தரை என்றும் நம்பிக்கையாக கொண்ட மனுஷன் பாக்கியவான், அவன் வருத்தமின்றி வரட்சி காலத்தில் தப்பாமல் கனிதரும் மரத்தைப்போல செழிப்பான். தேவனை நம்பி வாழ்கின்றேன் என்று பெயரளவில் பல மார்க்கத்தாரும் சொல்லிக்கொள்வார்கள் ஆனால் தங்கள் நம்பிக்கையை கிரியைகளில் காண்பிப்பதில்லை. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்து அவர் வழியில் நடப்பவன் ஒருபோதும் கைவிடப்பட்டதில்லை. உலகத்தில் உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று இயேசு சொன்னார்.

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தை பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்: அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள் நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். (ஏசாயா 40: 30-31)

என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, தேவனையே நோக்கி அமர்ந்திரு: நான் நம்புகிறது அவராலே வரும். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணிய கொம்பும் என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார் என தாவீது ராஜா பாடினார்.

உங்கள் திட நம்பிக்கை எங்கே உள்ளது? தேவன் தந்த ஆசீர்வாத ங்களிலா அல்லது ஆசீர்வாதங்களை தரும் தேவனிலா?

பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுப்புத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.

யாக்கோப்பின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அதிலுள்ள யாவையும் உண்டாக்கினவர்; அவர் என்றென்றைக்கும் உண்மையை காக்கிறவர். அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்: பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங் கொடுக்கிறார்; கட்டுண்டவர்களை கர்த்தர் விடுதலையாக்கிறார். குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார்: மடங்கடிக்கப்பட்டவர்களை கர்த்தர் தூக்கிவிடுகிறார்; நீதிமான்களை கர்த்தர் சிநேகிக்கிறார். பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளைகளையும் விதவையையும் ஆதரிக்கிறார் ; துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப் போடுகின்றார். கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார்; சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையும் ராஜரிகம்பண்ணுகிறார். அல்லேலூயா (சங்கீதம் 146 3:-10)

தாவீது ராஜா தன் வாழ்விலே தாழ்ந்த நிலையிலே ஒரு இடையனாக இருந்து, ஒரு பேரரசனாக உயர்தப்பட்டார். பல துன்பங்களையும் நெருக்கங்களையும் சந்தித்தபோதிலும் தன் சொந்த புத்தியின் மேலோ அல்லது தன் குதிரைப் பெலத்தின் மேலோ, அல்லது தனக்கிருந்த எந்த உலக பொருட்களின் மேலோ தன் நம்பிக்கையை வைக்காமல் தேவனை சார்ந்து இந்த வார்த்தைகளை சங்கீதமாக பாடினார். ஒரு புகழ்பெற்ற ராஜ்யத்தின் அரசனாக இருந்த காலத்திலும் அவர் தேவனுக்கு விரோதமாக குற்றம் செய்யத வேளைகள் உண்டு, ஆனாலும் தேவன் அதை தன் தீர்க்கதரிசியூடாக வெளிப்படுத்தினபோது, தாவீது ராஜா அகம்பாவம் கொள்ளாமல், தான் தேவன்மேல் கொண்ட நம்பிக்கையை தளரவிடாமல், தேவனிடம் தன்னைத் தாழ்த்தி மனம்வருந்தி மன்னிப்புக் கேட்டார். இவரை தன் இருதயத்திற்கு ஒத்த மனுஷன் என்று தேவன் கூறினார்.

மேலும் தாவீது ராஜா கூறியதாவது, பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள். கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள் கர்த்தரிடத்தில் மனமகிச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.

ANNUAL CONVENTION - 2014



வருடாந்த கன்வென்ஷன்

(ஆவணி 1-3)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

AUGUST 1st TO 3rd

FOR MORE INFORMATION

www.gtachurchnet.ca ☎ 416.613.2909

GRACE TABERNACLE

APOSTOLIC CHURCH